**O.S.No. 306/2021**

**Date:10.06.2025**

**வா.சா1 கனகராஜ்**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் பிரதிவாதியும் எனது தகப்பனாரும் உடன்பிறந்தவர்கள் என்றால்? சரிதான். தாவா சொத்துக்களை கிரையம் வாங்குவதற்கு முன்பு எங்கள் குடும்பத்திற்கு பூர்வீக சொத்துக்கள் இருந்ததா என்றால் இருக்கிறது. 1ம் பிரதிவாதியும் எனது தகப்பனாரும் பூர்வீக சொத்துக்களை பொறுத்து பாகம் எதுவும் செய்யவில்லை. எனது தகப்பனாருக்கு எந்த ஆண்டு திருமணம் ஆனது என்பது குறித்து பிராதில் கூறவில்லை என்றால்? சரிதான். எனது தகப்பனார் 1ம் பிரதிவாதியும் எந்த ஆண்டு வரை கூட்டுகுடும்பமாக வாழ்ந்து வந்தனர் என்பது குறித்து பிராதில் கூறவில்லை என்றால்? சரிதான். 1ம் தபசில் சொத்து மொத்தம் எவ்வளவு விஸ்தீரணம் என்று பிராதில் கூறவில்லை என்றால் சரியல்ல. 1ம் அயிட்ட சொத்து மொத்தம் 9 செண்ட் ஆகும். 1தபசில் விவரத்தில் பிராதில் குறிப்பிட்டுள்ளபடி தான் உள்ளது என்றால் சரிதான். 2ம் தபசில், 3ம் தபசில் சொத்து எவ்வளவு விஸ்தீரணம் என்று பிராதில் கூறவில்லை என்றால் சரியல்ல. 3ம் தபசில் சொத்து மொத்தம் 1செண்ட் ஆகும். 2ம் தபசில் சொத்து மொத்தம் நான்கே முக்கால் செண்ட் ஆகும். 2ம் தபசில் சொத்து தோராயமாக தான் தபசில் சொத்து விவரத்தை கூற இயலும் என்றால் சரிதான். எனது தகப்பனார் கிரையம் பெற்றதாக மூன்று ஆவணங்கள் தாக்கல் செய்துளளேன். மேற்படி ஆவணத்தின் அசல் என் கைவசம் உள்ளது. மேற்படி அசல் ஆவணங்களை தாக்கல் செய்யாதற்கான காரணத்தினை பிராதில் கூறவில்லை என்றால் அசல் எனக்கு தேவை என்பதால் நான் வைத்துக்கொண்டேன். அசல் ஆவணங்கள் எதுவும் என் கைவசம் இல்லை என்றாலும் வழக்கிற்காக எனது கைவசம் உள்ளதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா–ஆ.1 முதல் 3 ஆவணங்களில் புல எண் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் ஆவணத்தில் குறிப்பிடப்படவில்லை. பட்டாவில் உள்ளது. தந்தைக்கு மூன்றாம் வகுப்போ நான்காம் வகுப்போ படித்துள்ளார் . எனது தந்தை மாட்டுவியாபாரியாக வேலை பார்த்து வந்தார். தாவா சொத்தை கிரையம் பெறுவதற்கு முன்னர் பூர்வீக சொத்திலும் எனது தந்தை விவசாயம் பார்த்து வந்தார், அவர் தனிப்பட்டு வாங்கிய சொத்திலும் விவசாயம் பார்த்து வந்தார்.

தாவாசொத்துக்களை வாங்குவதற்கு உங்களது தகப்பனார் தனிப்பட்ட முறையில் சொத்து வாங்கியதற்கான ஆவணங்களை தாக்கல்செய்யவில்லை என்றால்? சரிதான். ஆனால் அதற்கான ஆவணங்கள் என் கைவசம் உள்ளது. தாவா சொத்துக்கள் அனைத்தும் எனது தகப்பனாரும், 1ம் பிரதிவாதியும் கூட்டுகுடும்பமாக இருக்கும் போது கூட்டுகுடும்பத்தின் பெயரில் எனது தகப்பனாரின் பெயரில் பெறப்பட்டது என்றால்? சரியல்ல. தாவா சொத்தில் 1995 ஆம் ஆண்டிற்கு முன்பு எந்த எண் கொண்ட வீட்டில் குடியிருந்ததாக பிராதில் கூறவில்லை என்றால் சரியல்ல. எனது தகப்பனார் எந்த தேதியில் காலமானார் என்று பிராதில் கூறவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து வாங்கும் போது எனது தகப்பனாரும் 1ம் பிரதிவாதியும் கூட்டுகுடும்பமாக இருந்தது குறித்து எனது தாயாரை விசாரித்தால் தெரியவரும் என்றாலும் எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் சரியல்ல. நான் 1978 ம் ஆண்டு பிறந்தேன். தாவா சொத்துக்களை வாங்கும்போது எனது வயது 10க்கும் குறைவாக தான் இருந்தது என்றால்? சரிதான். எனக்கு கூட்டுகுடும்பமாக இல்லை என்று விவரம் தெரியும். 1995ல் ஆண்டிற்கு முன்னர் எங்களது குடும்பமும், 1ம் பிரதிவாதியின் குடும்பமும் ஒன்றாக ஒரே வீட்டில் இருந்தோம் என்றால்? சரியல்ல. தனித்தனியாக தான் இருந்தோம். 1995 ஆம் ஆண்டிற்கு முன்புக்கு எந்த வீட்டில் குடியிருந்தோம் என்ற விவரத்தினை பிராதில் கூறவில்லை என்றால்? சரிதான். 1995ம் ஆண்டுக்கு முன்பு நாங்கள் குடியிருந்த வீட்டின் ஆவணத்தினை தேடிப்பார்க்க வேண்டும். 1995 ஆம் ஆண்டிற்கு முன்பு நாங்கள் குடியிருந்த வீடு தற்போது உள்ள வீட்டிற்கு 150 மீட்டர் தொலைவில் உள்ளது. மேற்படி வீடு தற்போது இடிந்த நிலையில் காலியாக உள்ளது. மேற்படி காலியாக உள்ள வீட்டின் புல எண் குறித்து கூற இயலுமா என்றால் இயலாது. மேற்படி காலி இடம் யார் பெயரில் உள்ளது என்பது குறித்து கூற இயலுமா என்றால் சொல்ல இயலாது. 1995ம் ஆண்டிற்கு முன்னர் 1ம் பிரதிவாதியின் குடும்பம் எங்கு இருந்தது என்றால் நான் ஏற்கனவே குறிப்பிட்ட சொத்தான தாவா சொத்தில் இருந்து 150 மீட்டர் தூரத்தில் உள்ள வீட்டில் தான் குடியிருந்தார்கள். 1ம் பிரதிவாதிக்கு எப்போது திருமணம் ஆனது என்றால் 35 ஆண்டுகளுக்கு மேல் இருக்கும். எனது தகப்பனாருக்கு எழுத்து கூட்டி வாசிக்க தெரியாது.

ஆனால் கையொப்பம் செய்ய தெரியும். எனது தகப்பனாரின் கையொப்பத்தை என்னால் அடையாளம் காண்பிக்க இயலும். 1990ம் ஆண்டு எனது தகப்பனாரும் 1ம் பிரதிவாதியும் சேர்ந்து பதிவு செய்யப்படாத ஒரு ஆவணத்தின் மூலம் பாகம் பிரித்து கொண்ட விவரம் தெரியுமா என்றால்? அப்படி எதுவும் பாகம் செய்யவில்லை. பிரதிவாதிகளின் குடும்பம் இன்றைய தேதியில் தாவா 3ம் சொத்தில் குடியிருந்து வருகின்றனர் என்றால்? சரிதான். மேற்படி வீட்டிற்கான மின் இணைப்பு, தீர்வை பிரதிவாதிகளின் பெயரில் இருந்து வருகிறது என்றால் அவை பிரதிவாதிகளினால் மோசடியாக ஏற்படுத்தப்பட்ட ஆவணம் ஆகும். எந்த ஆண்டில் இருந்து மேற்படி ஆவணங்களான தீர்வையும் மின் இணைப்பும் பிரதிவாதிகளின் பெயரில் இருந்து வருகிறது என்பது குறித்து தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதிகளின் குடும்பம் தாவா 3ம் தபசில் சொத்தில் குடியிருந்து வருவது எந்த ஆண்டு உங்களுக்கு தெரியும் என்றால் 2016 ஆம் ஆண்டு எனக்கு தெரியும். மேற்படி 2016ம் ஆண்டில் இருந்து வழக்கு தாக்கல் செய்த 2021 ம் ஆண்டு வரை தீர்வை, மின் கட்டணம் மோசடியாக பெற்றுள்ள விவரம் குறித்து புகார்அளித்துள்ளீர்களா என்றால் பஞ்சாயத்தில்புகார் அளித்துள்ளேன். மேற்படி புகார் அளித்தற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் கடந்த 6 மாதங்களாக சங்கரன்கோவிலில் பணியாற்றி வருகிறேன். அதற்கு முன்னர் சென்னையில் பணியாற்றி வந்தேன். எப்போதாவது தாவா கிராமத்திற்கு வருவேன். என்னையும் சங்கரையும் தவிர மற்ற வாதிகள் உள்ளூரிலேயே தான் வசிக்கிறார்கள். தாவா கிராமத்தில் சுமார் 300 வீடுகள் உள்ளது. தாவா 3ம் அயிட்ட சொத்தில் பிளான் அப்ரூவல் பெற்று பிரதிவாதிகள் வீடு கட்டியுள்ளனர் என்றால் பிரதிவாதிகள் வீடு கட்டவில்லை. மேற்படி வீட்டிற்கு பிரதிவாதிகள் பெயரில் பிளான் அப்ருவல் பெற்றுள்ளார்களா இல்லையா என்ற விவரம் எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் ஊரில் எல்லாருக்கும்தெரிந்து பஞ்சாயத்தில் பிளான் அப்ருவல் பெற்று வீடு கட்டியுள்ளனர் என்றால் சரியல்ல. 3ம் தபசில் சொத்தில் 1990 ஆண்டில் இருந்தே பிரதிவாதிகள் குடியிருந்து வருகின்றனார் என்றாலும், அன்றைய தேதியில் இருந்து அவர்கள் பெயரில் ஆவணங்கள் இருந்து வருகிறது என்றாலும் சரியல்ல. எனது தகப்பனார் வாழ்ந்த காலத்தில் எந்த வித சொத்தையும் விற்பனை செய்யவில்லை.

வழக்கில் குறிப்பிட்டு எனது தகப்பனாரின் வாரிசுகளான செல்வி, பிரேமா என்பவர்கள் நேரடியாக ஆஜராகி, சொத்தில் விடுதலை கொடுத்துவிட்டதாக சொன்னால் தான் ஏற்றுக்கொள்ள முடியும் என்றால் சரிதான். பிரதிவாதி தரப்பில் தாவா சொத்தில் குடியிருக்க அனுமதி கேட்டதாகவும், வாதிகள் தரப்பில் அதற்கு அனுமதி அளித்தாகவும் கூறுவததற்கு எழுத்து பூர்வமான ஆவணம் இல்லை என்றால் சரிதான். நாங்கள் உங்களுக்கு கொடுத்த அனுமதியை ரத்து செய்யவிட்டதாகவும், தபசில் சொத்தைவிட்டு காலி செய்ய வேண்டும் என்று எந்த வித எழுத்து பூர்வமான அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான், வாய்மொழியாக கூறினோம். தபசில் விவரத்தில் குறிப்பிட்டுள்ளதற்கும் தாக்கல் செய்த ஆவணங்களுக்கு எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த 3 கிரைய ஆவணங்களில் கண்ட அளவுகள் மற்றும் மால்கள், பிராதில் தபசில் விவரத்தில் கண்ட மால்கள், அளவுகள் முற்றிலும் மாறுபட்டவையாக உள்ளது என்றால் சரியல்ல. 3ம் தபசில் சொத்தானது எனது தகப்பனாரும் 1ம் பிரதிவாதிக்கு சேர்ந்து பாத்தியப்பட்ட பூர்வீக சொத்து என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த 3 கிரைய ஆவணங்கள் பிறப்பிக்கப்படும் போது எனது தகப்பனாரும் 1ம் பிரதிவாதியும் கூட்டுகுடும்பமாக வாழ்ந்து வந்தார்கள் என்றால் சரியல்ல. தாவாசொத்துக்களை அனைத்தும் மேற்படி கூட்டுகுடும்ப வருமானத்தில் இருந்து கிரையமாக பெறப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை கிரையம் பெறும் போது எனது தகப்பனாருக்கு தனிப்பட்ட வருமானம் கிடையாது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பிராது தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் அனைத்தும் எனது தகப்பனார் மூத்த மகன் என்பதால் அவருடைய பெயரில் கிரையம் பெறப்பட்டது என்றால் சரியல்ல.

ம.வி இல்லை.